மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.03/2024
அ.வ.எண்.194/2023

தங்கவேல் ... மனுதாரர்/3ம் பிரதிவாதி

/எதிராக/

1. சின்னதாயி
2. பெரியண்ணன்
3. லட்சுமி
4. கோவிந்தன்
5. வெள்ளியங்கிரி ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு கடந்த 10.12.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.இளங்கோ அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சரவணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151ன் கீழ் கடந்த 09.11.2023ம் தேதியில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து இத்துடன் தாக்கல் செய்யும் மனுதாரர் தரப்பு எதிர்வழக்குரையை ஏற்று மேற்படி வழக்கில் மேல் நடவடிக்கை செய்ய அனுமதியளித்து உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் :–

எதிர்மனுதாரர்கள்/வாதிகள் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்/3ம் பிரதிவாதி மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, மனுதாரர் தரப்பு விசாரணைக்காக கடந்த 09.11.2023ம்

தேதியன்று வாய்தா போடப்பட்டிருந்தது. மனுதாரர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு, உடல்நலம் சரியில்லாமல் நடக்கக்கூட இயலாத சூழ்நிலையில் வீட்டில் இருந்த படியே நாட்டு வைத்தியம் பார்த்து வந்ததால் அன்றையதினம் மனுதாரரால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. கடந்த 09.11.2023 ம் தேதியில் மனுதாரரர் நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் மனுதாரர் மீது ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இது வேண்டுமென்றோ, அஜாக்கிரதையாகவோ ஏற்பட்டதல்ல. எனவே கடந்த 09.11.2023 ம் தேதியில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து இத்துடன் தாக்கல் செய்யும் மனுதாரர் தரப்பு எதிர்வழக்குரையை ஏற்று மேற்படி வழக்கில் மேல் நடவடிக்கை செய்ய அனுமதியளித்து உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) 5 ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் தரப்பு விசாரணைக்காக கடந்த 09.11.2023 ம் தேதியன்று வாய்தா போடப்பட்டிருந்தது. ஆனால் அன்றையதினம் மனுதாரர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு உடல்நிலை சரியில்லாமல் நடக்கக்கூட இயலாத சூழ்நிலையில் வீட்டில் இருந்த படியே நாட்டு வைத்தியம் பார்த்து வந்ததால் மனுதாரரால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்பதும், கடந்த 09.11.2023 ம் தேதியில் மனுதாரரர் நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் மனுதாரர் மீது ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பதும், இந்த நிகழ்வு மனுதாரரின் அஜாக்கிரதையால் ஏற்பட்டதல்ல என்பதும் உண்மைக்கு புறம்பான சங்கதிகளாகும். மேற்படி மனுவில் எவ்வித வழக்குமூலமோ, முகாந்திரமோ கிடையாது.

(ii) மேற்படி மனுதாரருக்கு தாவா சொத்தில் உரிமை கோர எவ்வித ஆவணங்களோ, அடிப்படை ஆதாரமோ, எவ்வித உரிமையோ, சட்ட முகாந்திரமோ எதுவும் கிடையாது. உரிமையில்லாத நபர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மேற்படி தாவாவில் எவ்வித எதிர்வழக்காட முடியாது. மேலும் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததற்கான

எந்தவித மருத்துவ பரிசோதனை ஆவணங்களும், எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்பதற்கான மருத்துவ குறிப்பேடுகளும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. வேண்டுமென்றே காலம் கடத்த வேண்டுமென்ற நோக்கில் சுமார் 6 மாத காலத்திற்கு மேலாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் பொய்யான காரணங்களை கூறி மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்/3ம் பிரதிவாதி மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, மனுதாரர் தரப்பு விசாரணைக்காக கடந்த 09.11.2023ம் தேதியன்று வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், மனுதாரர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு, உடல்நலம் சரியில்லாமல் நடக்கக்கூட இயலாத சூழ்நிலையில் வீட்டில் இருந்த படியே நாட்டு வைத்தியம் பார்த்து வந்ததால் அன்றையதினம் மனுதாரரால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், கடந்த 09.11.2023ம் தேதியில் மனுதாரரர் நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் மனுதாரர் மீது ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், இது வேண்டுமென்றோ, அஜாக்கிரதையாகவோ ஏற்பட்டதல்ல என்றும், எனவே கடந்த 09.11.2023ம் தேதியில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து இத்துடன் தாக்கல் செய்யும் மனுதாரர் தரப்பு எதிர்வழக்குரையை ஏற்று மேற்படி வழக்கில் மேல் நடவடிக்கை செய்ய அனுமதியளித்து உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் தரப்பு விசாரணைக்காக கடந்த 09.11.2023 ம் தேதியன்று வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், ஆனால் அன்றையதினம் மனுதாரர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு உடல்நிலை சரியில்லாமல் நடக்கக்கூட இயலாத சூழ்நிலையில் வீட்டில் இருந்த படியே நாட்டு வைத்தியம் பார்த்து வந்ததால் மனுதாரரால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்பதும், கடந்த 09.11.2023 ம் தேதியில் மனுதாரரர் நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் மனுதாரர் மீது ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பதும், இந்த நிகழ்வு மனுதாரரின் அஜாக்கிரதையால் ஏற்பட்டதல்ல என்பதும் உண்மைக்கு புறம்பான சங்கதிகள் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(iii) மேலும் மேற்படி மனுதாரருக்கு தாவா சொத்தில் உரிமை கோர எவ்வித ஆவணங்களோ, அடிப்படை ஆதாரமோ, எவ்வித உரிமையோ, சட்ட முகாந்திரமோ எதுவும் கிடையாது என்றும், உரிமையில்லாத நபர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மேற்படி தாவாவில் எவ்வித எதிர்வழக்காட முடியாது என்றும், மேலும் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததற்கான எந்தவித மருத்துவ பரிசோதனை ஆவணங்களும், எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்பதற்கான மருத்துவ குறிப்பேடுகளும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றும், வேண்டுமென்றே காலம் கடத்த வேண்டுமென்ற நோக்கில் சுமார் 6 மாத காலத்திற்கு மேலாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் பொய்யான காரணங்களை கூறி மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(iv) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில், எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்/ 3 ம் பிரதிவாதி மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் கடந்த 09.11.2023 ம் தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராக கோரி மனுதாரருக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டுள்ளதும், மேற்படி தேதியில் மனுதாரரும், இதர பிரதிவாதிகளும் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், மனுதாரர் மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. இந்நிலையில் மனுதாரருக்கு பக்கவாத நோய்

ஏற்பட்டு, உடல்நிலை பாதிக்கப்பட்டதால், அன்றைய தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(v) மேற்படி மனுதாரர் கடந்த 09.11.2023 ம் தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராகாததற்கு முன்வைக்கும் காரணத்திற்கு ஆதரவாக எவ்வித மருத்துவ ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை எனினும், தற்போது இவ்வழக்கானது தாவா சொத்து குறித்து மனுதாரர் மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக வாதிகள்/எதிர்மனுதாரர்களால் கடந்த 05.12.2003 மற்றும் 12.07.2013 ஆகிய தேதிகளில் ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணங்கள் செல்லாதவை என விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொள்கையில், தாவா சொத்தின் பேரில் உரிமை கோரும் அனைத்து நபர்களின் எதிர்வாதங்களையும் பரிசீலித்து, இருதரப்பு சாட்சியங்களின் அடிப்படையில் இவ்வழக்கை விசாரித்தால் தான் தாவா சொத்து குறித்து தரப்பினரிடையே உள்ள பிரச்சனைக்கு இறுதியான தீர்வு காண இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vi) இவ்வழக்கில் தரப்பினரிடையே உள்ள பிரச்சனை இறுதியாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதாலும், வழக்கு சொத்து குறித்து தரப்பினரிடையே மேற்கொண்டு பல்வேறு வழக்கு நடவடிக்கைகள் எழுவதை தவிர்க்கும் நோக்கிலும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும், இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் இவ்வழக்கு நடவடிக்கைகளில் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலதாமதத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு எதிர்வரும் 27.01.2025 ம் தேதிக்குள் ரூ.1500/−ஐ செலவுத்தொகையாக செலுத்தும்பட்சத்தில் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு எதிர்வரும் 27.01.2025 ம் தேதிக்குள் ரூ.1500/−ஐ செலவுத்தொகையாக செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 27.01.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.01.23 17:11:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.01.23 17:11:24 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.